## இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம் - 2016

---

இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03

(i) 2015 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி வரித்தொகையை விஞ்சி அந்த ஆண்டிற்காக கிடைத்த ரூபா 28,123,058 தொகையான சுற்றுலா அபிவிருத்தி வரித்தொகை கணக்கீட்டு மதிப்பீடு மாற்றமாக இனங்காணப்பட்டு மாற்றம் ஏற்பட்ட காலப்பகுதியின் போது சீராக்கம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், பணியகத்தால் அந்த சுற்றுலா அபிவிருத்தி வரி மதிப்பீட்டில் ஏற்பட்ட வேறுபாடு பின்னோக்கிய ரீதியில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தது.

(ii) பணியகத்தால் முன்னைய ஆண்டிற்குரிய தவறுகளை சீராக்குவதற்காக வரவுக் கூட்டுமொத்தம் ரூபா 189,974,569 மற்றும் செலவு மொத்தம் ரூபா 84,063,843 தொகையும் மீளாய்வாண்டின் போது உரிய கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும் நியமத்தின் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08

(i) கடந்த காலத்தில் ஏற்பட்டதன் விளைவாக தற்போது கடப்பாடொன்று (சட்டரீதியாக அல்லது அங்கீகரிக்கப்பட்டதாக) காணப்படும் போது அதற்காக நிதிஏற்பாடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பணியகத்திற்கு சாதகமற்றதாக வெளிப்படுத்தப்பட்ட இந்திய திரைப்பட விருது வழங்கும் விழாவிற்கான வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் கடந்த காலங்களுக்குரியதாகச் செலுத்த வேண்டிய ரூபா 30,570,497 தொகை 2017 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக மீளாய்வாண்டின் இறுதிக் கணக்குகளில் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 588,197,382 தொகையொன்று அசாதாரண பொறுப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 310,762,704 பெறுமதியில் ரூபா 206,353,290 தொகை 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதி தனியார் ஊடக நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. கடந்த காலத்தில் ஏற்பட்டதன் விளைவாக தற்போது கடப்பாடொன்று (சட்டரீதியான அல்லது அங்கீகரிக்கப்பட்ட) காணப்படும் போது அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட செலுத்தப்பட்ட தொகை தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

மீளாய்வாண்டின் போது ரூபா 3,304,920 தொகை, ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக் கடனுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கைளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிங்கப்பூர் தூதுவராலயத்தினால் அனுப்பப்பட்ட மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் பணியகத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 434,832 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட இந்திய திரைப்பட விருது விழாவிற்காக ஏற்பட்ட செலவினத்தை அறவிடுவதற்காக வெளி வழங்குனருடன் முன்னைய ஆண்டுகளின் போது எடுக்கப்பட்ட சட்ட ரீதியான நடவடிக்கைகளின் விளைவாக மீளாய்வாண்டின் போது ரூபா 26,069,313 செலுத்தப்பட்டிருந்தது. இந்த செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் பின்னோக்கிய ரீதியில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக, ஆண்டின் மிகை அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கிரயம் ரூபா 7,400,000 தொகையான முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட இரண்டு மோட்டார் வாகனங்களுக்குரிய மீள் கணிப்பீட்டு சீராக்கத்தின் போது அந்த இரண்டு மோட்டார் வாகனங்களுக்குரிய திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 7,400,000 திரண்ட பெறுமானத் தேய்வு கணக்கிலிருந்து அகற்றப்படாமையினால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட பெறுமானத்தேய்வின் அளவு ரூபா 7,400,000 இனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மோட்டார் வாகனத்தின் தேறிய பெறுமதி அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 5,300,000 ஆக இருக்க வேண்டிய மீள் கணிப்பீட்டு மிகை ரூபா 2,100,000 மீள் கணிப்பீட்டு நட்டமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மீள வெளியிடப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள தொகைக்கும் கணக்காய்வினால் அந்த விடயங்களுக்குரியதாகக் கணிப்பிடப்பட்ட தொகைக்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்கு | நிதிநிலமைக்கூற்றின் பிரகாரம் மீதி | கணிப்பீட்டின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. |
| i. | பெறவேண்டிய கணக்குகள் | 876,256,774 | 864,656,912 | 11,599,862 |
| ii. | முற்பணம் | 1,582,500 | 1,577,350 | 5,150 |
| iii. | ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் | 38,469,347 | 32,269,347 | 6,200,000 |
| iv. | முற்பணமாகக் கிடைத்த வருமானம் | 10,766,000 | 11,319,550 | (553,550) |
| v. | செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 1,029,510 | 1,085,735 | (56,225) |
| vi. | அட்டுறு செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் | 332,835,041 | 314,420,254 | 18,414,787 |

(உ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட எனினும், பௌதீக சான்றுறுதிக்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 3,193,011 பெறுமதியான பல்வேறு உபகரணங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 239,475 பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு செலவினம் ரூபா 8,200,000 அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அட்டுறு செலவினம் அப்பெறுமானத்தில் அதிகரித்தும் மீளாய்வாண்டின் மிகை அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 2014 ஆம் ஆண்டிற்குரிய அட்டுறு செலவினம் ரூபா 13,994,803 தொகை 2015 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் 2016 ஆம் ஆண்டின் போது 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 135,784,470 தொகையான அட்டுறு செலவினம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,171,110 பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அட்டுறு செலவினம் சரியாக மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக நிதி விளைவைப் போன்றே நிதி நிலைமைகளிலும் சரியாக பின்பற்றாமைக்கு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

(ஏ) 2013 ஆம் ஆண்டில் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் தகவல் நிலையம் ஸ்தாபிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,529,500 பெறுமதியான நிலையான சொத்துக்களை மூலதனமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்காமல் செலவினமொன்றாகக் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்படவில்லை.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கீழே காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (அ) | தூதுவராலயத்திற்கு அனுப்பப்பட்ட பணம் | 24,491,929 | மீதி உறுதிப்படுத்தல் |
| (ஆ) | சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கல் செலவினம் | 276,000 | உரிய வழக்குத் தீர்ப்பின் பிரதி |
| (இ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 3,193,011 | பௌதீக ரீதியில் உறுதிப்படுத்துவதற்குரிய சொத்துக்கள் |

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தினதும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினதும் கணக்கு மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்குகளின் விபரம் | சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் கணக்குகளின் பிரகாரம் | சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் கணக்குகளின் பிரகாரம் | சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்குகளின் பிரகாரம் | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (அ) | பெறவேண்டிய குடியகல்வு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் | 935,491,177 | 995,584,564 | - | 60,093,387 |
| (ஆ) | நானாவித கடன்கொடுத்தோர் | 18,750,304 | - | 24,448,523 | 5,698,219 |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பெறவேண்டிய மீதிகளில் ரூபா 3,328,920 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 355,000 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்டு 05 வருடங்களுக்கு குறைவான காலமாகவும், ரூபா 2,618,893 தொகை 01 வருடத்திற்கு மேற்பட்டு 03 வருடங்களுக்கு குறைவான காலமாகவும் மற்றும் ரூபா 1,043,291,927 தொகை 01 வருடத்திற்கு குறைந்த காலமாகவும் நிலுவை மீதிகளில் உள்ளடங்கியிருந்தது.

(ஆ) சீன தூதுவர் அலுவலகத்திலிருந்து அறவிட வேண்டிய 04 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 19,731,593 ஆக இருந்ததுடன் ஏனைய தூதுவராலயங்களிலிருந்து 01 வருடங்களுக்கு மேற்பட்டும் 03 வருடங்களுக்குக் குறைவான காலமாகவும் அறவிட வேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 16,186,544 ஆகவும், 01 வருடத்திற்கு குறைந்த காலமாக அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 18,533,891 ஆகவும் இருந்தன.

(இ) செலுத்த வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,277,280 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 6,607,680 தொகை 5 வருடங்களுக்கு குறைவாகவும் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 2,839,476 தொகை 04 வருடங்களுக்கு குறைவாகவும் 01 வருடத்திற்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 8,025,868 தொகை 01 வருடத்திற்குக் குறைவான காலமாகவும் மீதிகளில் உள்ளடங்கியிருந்தன.

(ஈ) சர்வதேச தேசிய இந்திய திரைப்பட விருது விழாவிற்காக 2010 - (IIFA) 2010 ஆம் ஆண்டின் போது ஹோட்டலொன்றிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 1,575,000 முற்பணத் தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையில் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பிரிவின் 09 ஆம் உபபிரிவு | ஒவ்வொரு கலண்டர் வருடமும் முடிவுற்று மூன்று மாதங்கள் கடப்பதற்கு முன்னர் அவ்வாண்டின் பணியகத்தின் வேலை தொடர்பான அறிக்கையொன்று கலண்டர் வருடத்தின் ஏழு மாதங்கள் முடிவடையும் போது அரையாண்டு வருடாந்த கணக்குகள், பணியாக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட எதிர்வரும் 03 வருடங்களுக்கான காலஎல்லையில் எதிர்பார்க்கப்பட்ட திட்டம் மற்றும் முன்னைய ஆண்எற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பான செயலாற்றல் மற்றும் அடைவுகளை உள்ளடக்கிய கூற்று என்பன அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் 5 ஆம் உப பிரிவு மற்றும் 11 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் ரூபா 233,164,067 தொகையான மிகையொன்று பெறப்பட்டிருந்ததுடன் நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்ட நிதியினைப் பயன்படுத்தியதன் பின்னர் வருடத்தின் தேறிய வருமானத்தில் எஞ்சுகின்ற சகல தொகையும் திரட்டு நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 2,000 மில்லியன் தொகை குறுங்கால முதலீடாக அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக நிதி அமைச்சரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 104 | ரூபா 308,700 பெறுமதியான 03 மடி கணனிகள் காணாமல் போனமை தொடர்பான நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 757 | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அத்தியாயத்தின் 9.14.2 ஆம் பிரிவு | மனிதவள முகாமைத்துவம் தொடர்பாக எழுகின்ற சகல விடயங்கள் தொடர்பாகவும் விதிக்கப்படுகின்ற விதிகள் மற்றும் பிரமாணங்கள் திறைசேரி செயலாளரின் இணக்கப்பாட்டுடன் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பணியகத்தால் இந்த தேவைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (உ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ரூபா 2,000,000 பெறுமதியை விஞ்சிய அரச நிறுவனங்கள் மற்றும் அரச அபிவிருத்தி திட்டங்களுக்காக மேற்கொள்ளப்படும் அனுசரணைச் செலவினம் அல்லது அன்பளிப்புகளுக்காக மற்றும் அதற்கு புறம்பாக செலுத்தப்படும் ரூபா 100,000 இனை விஞ்சிய அனுசரணைச் செலவுகள் அல்லது அன்பளிப்புகளுக்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் வருடத்தில் அவ்வாறான அங்கீகாரம் பெறப்படாமல் அனுசரணை செலவுகள் மற்றும் அன்பளிப்புகளுக்காக ரூபா 26,278,110 கூட்டுமொத்தமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,733,164,067 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,443,689,744 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 289,474,323 அதிகரிப்பொன்று காணப்பட்டது. குடியகல்வோர் வரி 270,830,123 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 476,209,102 தொகையான மிகை தளம்பல்களுடன் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 233,164,067 ஆக வீழ்ச்சியடைந்திருந்தது. ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டில் பங்களிப்பு ரூபா 508,664,239 ஆக இருந்ததுடன், 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,823,085,390 வரை அதிகரித்திருந்தது.

## 3.2 பணியகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

வெளித்தரப்பினரால் பணியகத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த 07 வழக்குகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளிற்காக நடைமுறை விகிதம் முறையே 10:1 மற்றும் 14:1 ஆனமையால் உயர் திரவத்தன்மை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் தொடர்ச்சியாக குறுங்கால முதலீடுகளில் பணத்தை ஈடுபடுத்தியிருந்தமை இதற்குக் காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 40(4) ஆம் பிரிவிற்கு அமைய பணியகத்தின் நோக்கம் பின்வருமாறு.

- அதிகாரசபையின் ஆலோசனைகளை ஆராய்ந்து சுற்றுலா அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக சிறந்த சுற்றுலா மற்றும் சுற்றுலாப் பயணமுடிவு என நேரடியாக அல்லது மறைமுகமாக இலங்கையை சுற்றுலா துறையில் சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்.

- தெற்கு ஆசிய வலயத்தின் நுழைவாயிலாக இலங்கையை மேம்படுத்தல், மற்றும்

- வலயத்தின் சிறந்த சுற்றுலாக் கைதொழில் முகாமை மற்றும் அபிவிருத்தி நிலையமாக இலங்கையை பிரசித்தப்படுத்தல்.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சர்வதேச நடன விழாவிற்காக அனுசரணைப் பங்களிப்பை பெற்றுத்தந்மைக்காக பணியகத்தினால் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டு ரூபா 1,500,000 முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட விழா நடாத்தப்படாதிருந்ததுடன் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணத் தொகையை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டில் ரூபா 70,321,758 தொகை செலவு செய்து தனியார் நிறுவனம் ஒன்றினால் Global Television Campaign எனும் பெயரில் இரண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அல் ஜசீரா தொலைக்காட்சி சேவை ஊடாக அந் நிகழ்ச்சிகள் கணக்காய்வுத் திகதியான 2017 யூன் 30 வரை விளம்பரப்படுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது பணியகத்தின் மூலம் அதிகாரசபைக்கு நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி பட்டியல்களுக்காக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 824,363 தொகை தனித்தனியாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டிற்காக அட்டுறு செலவினமாக பல்வேறு பிரிவுகளிலிருந்தும் சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதியில் ரூபா 25,102,429 தொகை கணக்குப் பிரிவினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், முகாமையினால் அட்டுறு செலவினங்களை இனங்காணும் போது சரியான முறையில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2017 நவம்பர் 20 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சர்வதேச இந்திய திரைப்பட விழா 2010 இற்காக செலவினங்களைச் செய்தல் தொடர்பாக வெளித்தரப்பினரால் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை என்ற இரண்டு நிறுவனங்களுக்கு எதிராக தொடரப்பட்ட HC(civil)480/2011/DMR ஆம் இலக்க வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையான ரூபா 23,803,179 பணியகத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கணக்குகளைச் கமர்ப்பிக்கும் போது இனங்காணப்படாதிருந்த 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 135,784,470 தொகை 2016 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு இருந்தது.

## 4.4 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் நடைபெற்ற சுற்றுலா மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக (Leisure Travel and Tourism Fair - 2014) ரீசேட்டுக்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 7,800,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த ரீசேட் இருப்புக்கள் பணியகத்திற்கு கிடைக்கப் பெற்றிராததுடன் அக்கொள்வனவுகளுக்காக தயாரிக்கப்பட்ட பதிவேடுகளை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி நடைமுறைகளுக்கு புறம்பாக 2010 ஆம் ஆண்டு சர்வதேச இந்தியா திரைப்பட விழாவிற்காக (IIFA) ரூபா 1,116,000 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 07 மடி கணனிகள் மற்றும் 03 மேசைக் கணனிகள் களஞ்சியத்திற்கு கையேற்கப்பட்டமைக்கான அல்லது அலுவலர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டமைக்கான எழுத்து மூலச் சான்றுகள் சமர்பிக்கப்படாததுடன் அவை பௌதீக பரிசோதனைக்கும் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க வர்த்தமானியில் பகிரங்கப்படுத்தப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயல் நடைமுறை விதி 69 இன் பிரகாரம் நேர்முகப் பரீட்சை சபை ஒன்று நியமிக்கப்படாதிருக்கும் போதும், அதன் 74 ஆம் விதியின் பிரகாரம் கோவையொன்று பேணப்படாதிருக்கும் போதும் அமைச்சின் அங்கீகாரமும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றியும் தகைமையற்ற உத்தியோகத்தர் விழாவை நடாத்தும் பணிப்பாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் முதல் 2016 மே வரை அவருக்கு சம்பளம், தொலைபேசி பட்டியல், எரிபொருள் மற்றும் வாகனப் படி மற்றும் சுகநலன் காப்புறுதி திட்டம் என்பவைகளுக்காக ரூபா 1,689,340 செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பிரான்ஸ் சுற்றுலா முகவர் தேசிய சங்கத்தின் வருடாந்த மாநாட்டை இலங்கையில் நடாத்துவதற்காக மாநாட்டுப் பணியகத்துடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் விமானப் பயணக் கட்டணம் யூரோ 500 வரை வருகை தருகின்ற சுற்றுலாதாரிகளினால் ஏற்கப்பட வேண்டும். எனினும், இலங்கைக்கும் பிரான்ஸ் இற்கும் இடையே நேரடி விமான சேவை நிறுத்தப்பட்டிருந்ததன் காரணமாக, பிராயாணி ஒருவருக்கு செலவிடுவதற்கு ஏற்பட்ட அதிகரித்த விமான பயணக் கட்டணம் வசதிகளை வழங்குகின்ற நாட்டிலிருந்து செலவிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் அதிகரிக்கும் விமானப் பயணக் கட்டணம் மாத்திரம் பணியகத்தினால் ஏற்கப்பட வேண்டிய போதிலும், செலுத்த வேண்டிய கட்டணத்தை தீர்மானிக்காமல் விமான சேவைக் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் மொத்தப் பெறுமதியான ரூபா 37,442,851 தொகை வகைப்படுத்தப்படாமல் பணியகத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 பதவியணியனர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 20 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் சிரேஷ்ட நிலையில் உள்ள உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 09 ஆகும்.

(ஆ) சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 40(7) ஆம் பிரிவு மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதி 69, 70, 72, 73 மற்றும் 74 என்பவைகளுக்கு முரணாக பணியகத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பதவிக்கு தகைமையற்ற உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டு 2016 மார்ச் முதல் மே வரையான காலத்திற்காக சம்பளமாக ரூபா 1,556,110 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம்மொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இச்செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றங்களை காலரீதியில் பரீட்சிப்பதற்கான முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், செயல்நடவடிக்கைத் திட்டத்தையும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையையும் பரீட்சித்த போது ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 534 செயற்திட்டங்களில் 225 ஐ நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு சந்தைப்படுத்தல் மேம்படுத்தல்களுக்காக 21 பிரதான நாடுகளில் 122 கண்காட்சிகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 80 கண்காட்சிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அதற்காக வெளிநாட்டு நாணய அலகுகளில் வெளிநாட்டு வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 438.36 மில்லியன் தொகையில் ரூபா 78.92 மில்லியன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக செலுத்தப்படாமல் நேரடியாக பணியகத்தால் வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பெறுகைகள் திட்டம்

2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகைகள் சுற்றறிக்கையின் அத்தியாயத்தின் 4.2.1(அ),(ஆ) மற்றும் (இ) பிரிவின் பிரகாரம் எதிர்வரும் வருடத்திற்கான விரிவானதொரு திட்டத்துடன் ஆகக் குறைந்தது மூன்று வருடங்களை உள்ளடக்கும் வகையில் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 43 விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கிடையே 45 சதவீதம் முதல் 659 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.5 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் 2014 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2017 யூலை 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.6 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 நவம்பர் 03 ஆந் திகதி முதல் 06 வரை ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சிக்காக பெறுகைகள் நடைமுறைகளுக்குப் புறம்பாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 350,000 பெறுமதியான 02 இரத்தினக்கற்கள் மற்றும் இலவசமாக பணியகத்திற்குக் கிடைத்த 02 இரத்தினக்கற்கள் என்பன களஞ்சிய இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் இலவசமாகக் கிடைத்த 02 இரத்தினக்கற்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் கரட் 1.4, 1.6, 1.63 மற்றும் 1.54 நிறை கொண்ட 04 இரத்தினக் கற்கள் பணியகத்திற்குக் கிடைத்திருந்ததினால் ரூபா 350,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட 02 இரத்தினக் கற்களின் நிறை 5.6 கரட் ஆனமையால் ஆபரணங்கள் அதிகாரசபையின் பரிசோதனை அறிக்கை மற்றும் விலைப்படியலில் குறிப்பிடப்பட்ட விபரங்களின் பிரகாரம் இரத்தினக் கற்களின் கரட் நிறை இணங்காதிருந்தது.

(ஆ) 2014 ஆண்டின் உலக சுற்றுலா தினத்திற்கென குறிப்பிட்டு ரூபா 5,824,000 தொகை செலவில் அச்சிடப்பட்டிருந்த ரீசேட், அதன் விநியோக நிறுவனத்தின் பணிப்பாளரின் கூற்றின் பிரகாரம் அரசியல் கட்சியொன்றின் பிரசார நடவடிக்கை ஒன்றிற்காக அச்சிடப்பட்டு இருந்தது.

(இ) சுற்றுலா துறைகளில் சமூகப் பொறுப்புக்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்காக இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு ரூபா 99,439,900 (வரி தவிர்த்து) தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக்கொடுப்பனவு ஏற்றுக்கெள்ளப்பட முடியாத கொடுப்பனவு என அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சி "(WTM)(UK)2014" இற்காக வர்த்தகக் கண்காட்சி கொட்டகைகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் வழங்கும் போது கூறுவிலை கோரல் கடிதம் திறக்கப்பட வேண்டிய திகதிக்கு 4 நாட்களுக்கு முன்னர் திறக்கப்பட்டமை, கேள்விதாரர் அல்லது முகவரொருவர் கேள்விக் கடிதத்தைத் திறக்கும் சந்தர்ப்பத்தில் சமூகமளிக்காமை, ஒப்பந்தக்காரர் பிரித்தானிய துாதுவர் அலுவலகத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு அதன் பிரதியொன்று மேம்படுத்தல் பணியகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியமைக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் வர்த்தகக் கண்காட்சி கொட்டகைகள் வெற்றிகரமானதாக நிர்மாணிக்கப்பட்டமைக்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் சான்றிதழொன்று இல்லாமல் அந் நிர்மாணங்களுக்காக ரூபா 17,803,508 தொகைக் கொடுப்பனவொன்று பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) 12 சீன ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்றிற்கு இலங்கையின் சுற்றுலாத்துறையில் கவர்ச்சிகரமான சில பிரதேசங்களை மேவுகை செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்ட FAM சுற்றுலாவிற்காக ரூபா 3,506,757 செலவிடப்பட்டிருந்ததுடன், அந்த சுற்றுலா தொடர்பான அறிக்கை, சீன ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014(ICC) உலகக் கிண்ண இருபதுக்கு இருபது கிரிக்கட் போட்டி தொடரில் கிரிக்கட் சுவரொட்டி பிரசுரம் தொடர்பான பெறுகையில், பெறுகை குழு தீர்மானம் 2014 ஏப்ரல் 28 ஆம் திகதி அன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், கேள்வி திறக்கப்பட்ட 2014 ஏப்ரல் 08 ஆம் திகதி அன்றே தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று கூடி தமது அறிக்கையை வழங்கியமை, தனியார் றிறுவனம் ஒன்றிலிருந்து வரியுடன் ரூபா 700,000 ஆன விலைப்பட்டியல் பெறப்பட்டமை மற்றும் கிரிக்கட் சுவரொட்டி சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்திற்கு கிடைக்கப் பெற்ற பொருட்கள் தொடர்பாக கையேற்பு பத்திரம் வழங்கப்பட்டமையால் இச்செயற்பாடு வெளிப்படையாக இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | சில இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படாமை, மீள் கணிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படாமை மற்றும் பெறப்படவேண்டிய கணக்குகள் சரியான கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமை, முன்னைய ஆண்டு சீராக்கங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படாமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு மற்றும் உள்ளபடியான செலவினங்களில் கவனிக்கத்தக்க முரண்பாடு நிலவுகின்றமை. |

| | | |
|---|---|---|
| (இ) | மனிதவள முகாமைத்துவம் | ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |
| (ஈ) | பெறுகைகள் | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | நிலையான சொத்துக்களின் பதிவேடுகளின் கட்டுப்பாடு | பணியகத்தின் நிலையான சொத்துக்கள் சகலவற்றையும் இனங்கண்டு நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்காமை. |